நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 180/2019

## P.W.5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வேல்முருகன் |
| தந்தை / கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | பாப்பாகுடி |
| வட்டம் | : | உடையார்பாளையம் |
| மாவட்டம் | : | அரியலூர் |
| சாட்சி வரிசை எண் | : | PW5 |
| வயது | : | 37 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 23–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.48 PM.

1. நான் மேட்டுர் STF கேம்பில் இருந்து மாலை 6.00 மணிக்கு கிளம்பி சம்பவ இடத்திற்கு 6.45 மணிக்கு சென்றேன். என்னுடன்உதவி ஆய்வாளர் பிரிட்டோ என்பவரும், தலைமை காவலர் ரவி மற்றும் அடையாளம் தெரியாத நபர்கள் சேர்ந்து மொத்தம் 6 நபர்கள் சம்பவ இடத்திற்கு சென்றோம். நாங்கள் சம்பவ

இடத்திற்கு செல்லும்போது வனத்துறையினர் அங்கு இல்லை. அதன் பிறகு சுமார் அரைமணிநேரம் கழித்து வந்தார்கள்.

2. 1 மணிநேரம் ஒரே இடத்தில் எங்கள் குழுவினர் 6 பேரும் காத்திருந்தோம். சாட்சி தற்போது எவ்வளவு நேரம் காத்திருந்தோம் என்று 15 வருடங்கள் ஆனபடியால் சரியாக ஞாபகமில்லை என்று தெரிவிக்கிறார். ஆனால் நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்ற பிறகுதான் வனத்துறையினர் அங்கு வந்தனர். நாங்கள் காத்திருக்கும்போது ஒரு நபர் வனப்பகுதியில் இருந்து வெளியே வந்தார். அந்த நபரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியாது. ஆஜர் எதிரிதான் அந்த நபரா என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது.

3. நாங்கள் அந்த நபரை விசாரிக்கும்போது கையில் உடும்பை வைத்திருந்தார். அந்த நபரை பிடித்து வனத்துறையினருக்கு தகவல் கொடுத்து அதன்பிறகுதான் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். வனத்துறையினரிடம் எதிரியை ஒப்படைத்துவிட்டு நாங்கள் சென்று விட்டோம். நாங்கள் மீண்டும் கேம்பிற்கு வந்துவிட்டோம். நாங்கள் கேம்ப்பிற்கு 8.30 மணியிலிருந்து 9.00 மணிக்குள் வந்துவிட்டோம். காவல் உதவி ஆய்வாளர் வனத்துறையினரிடம் தனியறிக்கை ஏதாவது கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. கைப்பற்றிய உடும்பு இறந்த நிலையில் தான் இருந்தது. உடும்பில் காயம் ஏதேனும் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. வனத்துறையினரிடம் ஒப்படைக்கும்போது ஏதோ ஆவணங்களை தயார் செய்தார்கள் . அது என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. அதில் கையெழுத்து போட்டேனா என்று எனக்கு ஞாபகமில்லை. 6 மாதத்திற்கு முன்பாக என்னை இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பிய பிறகுதான் நான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கபட்ட விபரம் எனக்கு தெரியும். இந்த சம்பவம் பற்றி வனத்துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

5. நான் வனத்துறையினர் அலுவலகத்திற்கு சென்றேனா என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவ இடத்தை சுற்றி ஊர்கள் உள்ளது என்றால் சரிதான். வனத்துக்குள் ரொம்பதூரம் செல்லவில்லை. ஊரை ஒட்டிய பகுதியில்தான்

ரோந்து சென்றோம். அந்த பகுதி ஆடு, மாடுகளை மேய்க்க பொதுமக்கள் வருவார்கள் என்றால் சரிதான்.

6. உடும்பு எவ்வாறு பிடிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி நபர் உடும்பை தவிர வேறு ஏதேனும் பொருட்களை வைத்திருந்தாரா என்றால் கையில் ஒரு கத்தி வைத்திருந்தார். அவருடன் நாய் இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. உண்மையில் நான் சொன்னவாறு நாங்கள் மாலை நேரத்தில் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும், காலை நேரத்திலேயே சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றுவிட்டோம் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

7. ஆடு, மாடுகளுக்காக இலை, தழை ஒடிக்க சென்ற எதிரியின்மீது நாங்கள் ரோந்து சென்றோம் என்று கணக்கு காட்டுவதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. உதவி ஆய்வாளர் அழைத்தற்காக ரோந்துக்கு சென்றோம். அது வழக்கமான ரோந்து பணியா அல்லது ரகசிய தகவலின் பேரில் நடந்த ரோந்து பணியா என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 03.12 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**